செ.வெ.எண்-15 நாள்-09.01.2021

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் மற்றும் செந்துறை ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட விளாங்குடி, உஞ்சினி ஆகிய பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (09.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இவ்வாய்வின்போது, விளாங்குடி காலனித்தெருவில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் 185 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் வாய்காலினை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மழைக்காலங்களில் குடியிருப்புகளை சுற்றி நீர் தேங்காத வண்ணம் மழைநீர் முழுவதும் வெளியேறும் வகையில் கழிவுநீர் வாய்கால் அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்தும், இதன் மூலம் தற்பொழுது பெய்துள்ள மழைநீர் இக்கால்வாய் வழியாக விரைவாக வெளியேறுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும், கழிவுநீர் வாய்க்கால்கள் பயன்பாட்டை மற்ற பகுதிகளுக்கும் விரிவுப்படுத்த தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, பாரத பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் வீடு ஒதுக்கீடு பெற்ற திரு.ராமசாமி என்பவரின் குடியிருப்பை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பயனாளியிடம், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள புதிய வீட்டிற்கான கட்டுமானப்பணிகளை விரைந்து ஆரம்பித்து, முடிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும், மழைக்காலங்களில் பரவும் பல்வேறு வகையான தொற்று நோய்களிலிருந்து பொதுமக்கள் அனைவரும் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் தாங்கள் வாழும் சுற்றுப்புறத்தினை தூய்மையாக பராமரிக்கவும், கொரோனா பேரிடர் காலத்தில் பொது இடங்களில் முககவசம் அணிந்தல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், சோப்பு போட்டு கைகளை கழுவுதல் உள்ளிட்ட பழக்கங்களை வழக்கமாக்கிக் கொள்ளவும் பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, விளாங்குடி அரசு தொடக்கப்பள்ளியில் ரூ.10.52 இலட்சம் மதிப்பீட்டில் 157.60 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் பாதுகாப்பிற்காக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளை உயர்ந்த தரத்துடன் விரைந்து முடித்து, பயன்பாட்டிற்கு கொண்டு வர வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

பின்னர், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட உஞ்சினி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.1.83 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை பழுது நீக்கம் செய்யும் பணிகளை ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் வகுப்பறைக்குள் எளிதில் செல்லும் வகையில் எளிதான நுழைவு அமைப்புகளை ஏற்படுத்தவும், அதனைத்தொடர்ந்து, சிறுகடம்பூர் ஊராட்சியில் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் 790 குடியிருப்புகளுக்கு ரூ.45.30 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 7500 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகளை ஆய்வு அசய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

கிராமப்புற வளர்ச்சிக்காகவும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் பல்வேறு வகையான வளர்ச்சித்திட்ட பணிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் அனைவரும் முழுமையாக பயன்படுத்திக்கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, சிவாஜி, தமிழரசன், நாராயணன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**